எங்கள் வேலூரில் 6 ஆண்டுகளுக்கு முன்னாலே நாகா நகைக் கடையிலே தீவிரவாதிகள் வந்து இரண்டு பேரை சுட்டுவிட்டுப் போன வழக்கு, இன்னும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கிறது. அந்த வழக்கை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும். நம்முடைய காவல் துறைக்கு அது ஒரு சவால். ஆகவே, வேலூர் வடக்கு காவல் நிலைய... (மணியடிக்கப்பெற்றது) நன்றி சொல்லுகின்றேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் மைக் பட்டனிலிருந்து கையை எடுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: கனியம்பாடியிலே காவல் நிலையைக் கட்டடம் ஒன்று கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் திங்கட்கிழமையும் தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (10–5–2010) திங்கட்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–19 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

- ஏதுமில்லை -

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

157. மானியக் கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

158. மானியக் கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 7

159. மானியக் கோரிக்கை எண் *37*-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, *2010-2011.* (தமிழ், ஆங்கிலம்)

160. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை. *(2009-2010)*

***

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS